பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 7
குகைவாசிகள் பதிப்பகப் பாதை 14
ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 21
முதல் பதிப்பாளர் முன்னுரை 25
ஆங்கில மொழிபெயர்ப்பாளர் முன்னுரை 29
அறிமுகம் 32
1 ஹிஜாபின் சிறப்பம்சங்கள் 35
1. கீழ்ப்படிதலின் அம்சம் ஹிஜாப் 35
2. பணிவும் நாணமும் வெளிப்படுகிற செயல் ஹிஜாப் 38
3. பரிசுத்த உள்ளத்தின் செயல்பாடு ஹிஜாப் 39
4. மானத்தைக் காக்கும் கேடயம் ஹிஜாப் 40
5. இறையச்சத்தின் வெளிப்பாடு ஹிஜாப் 41
6. இறைவிசுவாசத்தின் அடையாளம் ஹிஜாப் 42
7. வெட்க உணர்வின் வடிவம் ஹிஜாப் 42
8. ரோஷமுள்ள மனிதர்களின் விருப்பம் ஹிஜாப் 43
2 தபர்ருஜ் – கவர்ச்சியைக் காட்டுதல் ஓர் அவமானம் 46
1. அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் கீழ்ப்படியாத குணம்தான் தபர்ருஜ் 46
2. பயங்கர அழிவைத் தரும் பாவமே தபர்ருஜ் 47
3. அல்லாஹ்வின் சாபத்தையும் அவனது கருணையிலிருந்து தூர விலகிச் செல்வதையும் கொண்டுவரும் தபர்ருஜ் 48
4. நரகவாசிகளின் பண்புதான் தபர்ருஜ் 48
5. மறுமைநாளில் இருளைத் தரும் தபர்ருஜ் 49
6. நயவஞ்சகம் வெளிப்படும் நிலைதான் தபர்ருஜ் 50
7. வெட்கக்கேடுதான் தபர்ருஜ் 50

8. நெறி தவறியதும் வெட்கக்கேடுமான பாவம்தான் தபர்ருஜ் 51
9. ஷைத்தானிய வழிமுறைதான் தபர்ருஜ் 53
10. யூதர்களின் வழிமுறையே தபர்ருஜ் 54
11. தபர்ருஜ் அசிங்கமான ஓர் அறியாமை 57
12. தபர்ருஜ் மிருகத்தனமானது; அழிவையும் இழிவையும் பின்னேற்றத்தையும் தருவது 58
13. பாவங்களைக் கட்டவிழ்த்துவிடும் பாதைதான் தபர்ருஜ் 59

3 ஹிஜாப் – அவசியமான அடிப்படை விதிகள் 62
1. உடலை முழுமையாக மறைத்தல் 62
2. ஹிஜாப் ஒரு காட்சிப் பொருளாகக் கூடாது 62
3. ஹிஜாப் மெல்லியதாக இல்லாமல் கனமாக இருக்க வேண்டும் 63
4. ஹிஜாப் இறுக்கமாக இல்லாமல் பெரிதாக, தாராளமானதாக இருக்க வேண்டும் 64
5. ஹிஜாபில் நறுமணம் பூசக் கூடாது 64
6. ஹிஜாப் ஆண்களின் ஆடையை ஒத்திருக்கக் கூடாது 65
7. முஸ்லிமல்லாத, இறைநிராகரிப்புப் பெண்களின் ஆடைகளை ஒத்திருக்கக் கூடாது 66
8. ஹிஜாப் புகழுக்காக அணிவதல்ல 66
9. மறைவான கவர்ச்சி காட்டுதல் 67

4 செவியேற்போம்; கீழ்ப்படிந்து நடப்போம் 71

1 அறிமுகம் 77

2 அந்நிய ஆண்களைவிட்டுத் திரையிட வலியுறுத்தும் இறைக்கட்டளை 80

3 முக்காடிட்டுக்கொள்வதின் நன்மைகள் 83

4 மூதாட்டிகள் குறித்த இறைவசனத்தின் நுட்பமான கட்டளை 85

5 பார்வையைத் தாழ்த்திக் கற்பைக் காப்பதின் கடமை 87

6 அந்நிய ஆண் பெண் தனித்திருப்பதின் தீமை 93

7 இறைநிராகரிப்பாளர்களைப் பின்பற்றுவதின் கேடுகள் 97

8 பொறுப்புதாரிகள் தீமைகளைத் தடுக்கட்டும் 99

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு

❀

பெயரும் பிறப்பும்

ஷெய்க் முஹம்மது இப்னு அஹ்மது இப்னு இஸ்மாயீல் இப்னு முஸ்தஃபா இப்னு அல்முக்தம் அவர்கள் ஹிஜ்ரீ 1371 (26.7.1952) இல் எகிப்தில் உள்ள அலெக்ஸாண்ட்ரியாவில் பிறந்தார்கள்.

கல்வி

தொடக்கத்தில் அன்ஸார் அஸ்ஸுன்னத்தில் முஹம்மதிய்யா என்ற கூட்டமைப்பின் மூலம் வளர்க்கப்பட்டார்கள். 1972 முதல் ஸலஃபு மன்ஹஜ்ஜின்பக்கம் மக்களை அழைக்கக்கூடியராக ஆனார்கள். 1977ல் அலெக்ஸாண்ட்ரியாவில் மத்ரசா ஸலஃபிய்யாவை உருவாக்கினார்கள். அங்குதான் பிற்காலத்தில் அதிகமான உலமாக்கள் தஅவாவுக்காக உருவானார்கள்.

அலெக்ஸாண்ட்ரியா பல்கலைக்கழகத்தில் மருத்துவம் பயின்று கொண்டிருந்த காலத்தில்தான் அவர்களைப் போன்றே ஸலஃபுடைய பாதையின் பக்கம் பிரச்சாரம் செய்து கொண்டிருந்த ஷெய்க் அஹ்மது ஃபரீத் (ஸலஃபீ, மிஸ்ரீ) அவர்களை முதன் முறையாகத் தன் வகுப்புத் தோழர்களுடன் சந்தித்தார்கள். அப்போது தமது கல்லூரி இளைஞர்களிடையே சிற்றிதழ்களை ஷெய்க் முஹம்மது அல்முக்தம் மும்முரமாகப் பரப்பிக் கொண்டிருந்த நேரம். எனவே, அதில் ஷெய்க் ஃபரீத் அவர்களின் கட்டுரையும் இடம்பெற்று மாணவர்களிடையே பரவியது. இப்படியாகத்தான் தஅவா எனும் அழைப்பியல் விதை அலெக்ஸாண்ட்ரியாவின் இளைஞர்களின் இதயங்களில் விளையத் தொடங்கிற்று. நாளடைவில் தலைநகரான கெய்ரோ உட்பட எகிப்தின் நாலாபுறமும் தஅவத்துஸ் ஸலஃபிய்யா தமது கிளையைப் பரப்ப ஆரம்பித்தது.

ஷெய்க் அவர்கள் வாரம் தவறாமல் கெய்ரோவிற்குச் சென்று மாணவர்களைச் சந்திப்பவர்களாக இருந்தார்கள். இவர்களது தொடர்

முயற்சியின் காரணமாக எகிப்தைத் தாண்டி அரபு தேசங்கள், ஐரோப்பா, அமெரிக்கா போன்ற தேசங்களுக்கும் தஅவா பரவியது.

தற்போது ஷெய்க் அவர்கள் எகிப்தின் இரண்டாம் தலைநகரான போல்க்லியிலுள்ள இமாம் அபூ ஹனீஃபா பள்ளிவாசலில் பாடம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஆசிரியர்கள்

ஷெய்க் முஹம்மது அப்துல் ஹலீம் அப்துல்லாஹ்,

ஷெய்க் முஹம்மது ஃபரீத் நுஅமான்

ஷெய்க் உசாமா அப்துல் வஹ்ஹாப்

அல்லாமா அபூ முஹம்மது பதீஉத் தீன்

ஷெய்க் ஷாஹ் ராஷிதீ சிந்தீ முஹம்மதீ

ஷெய்க் முஹம்மது ஹசன் ஷன்கீதீ

ஷெய்க் அப்துல்லாஹ் இப்னு ஸாலிஹ் இப்னு அப்துல்லாஹ் அபீத்

தொகுப்புகள்

- தமாமுல் மின்னதி பிர் ரத்தி அலா அஅதாயிஸ் ஸுன்னதி - ஸுன்னத்தை விரோதிப்போருக்கு மறுப்புரை மூலம் கிடைக்கும் பரிபூரணமான உதவி
- அந் நஸீஹத்து ஃபில் அத்கார் வல் அத்இயத்திஸ் ஸஹீஹா - திக்ருகளைப் பற்றிய உபதேசங்களும் சரியான துஆக்களும்
- ஹுர்மது அஹ்லில் இல்ம் - கல்வியாளர்களுக்கான கண்ணியங்கள்
- அல்லிஹ்யத்து லி மாதா - தாடி எதற்கு?
- அல்ஹிஜாப் லி மாதா - பர்தா எதற்கு?
- லி மாதா நுஸல்லி - தொழுவது ஏன்?
- உலுவ்வுல் ஹிம்மத் - உயர்வான உறுதி
- அல்அதபுல் ளாயிஉ - ஒழுக்கத்தின் அவசியம்
- ஃபிக்ஹ் அஷ்ராத்துஸ் சாஅத் - மறுமைநாள் பற்றிய சில ஞானங்கள்
- அல்மஹ்தீ - இமாம் மஹ்தீ ﷺ

- பித்அத்து தக்சீமுத் தீன் - மார்க்கத்தைக் கூறுபோடுதல்
- அல்ஹயாஉ ஹுல்குல் இஸ்லாம் - வெட்கம் அது இஸ்லாமிய குணம்
- முஹ்தஸருன் நஸீஹத் - சுருக்கமான உபதேசங்கள்
- அத்கார் வ ஆதாபுஸ் ஸபாஹ் வல் மசாஉ - காலை மாலை துஆக்களும் சில திக்ர்களும்
- அத் தத்கிரத்து பி அத்இயத்தில் ஹஜ்ஜு வல் உம்ரா - ஹஜ்ஜு உம்ரா துஆக்களும் அதன் நினைவூட்டல்களும்
- அத்காருஸ் ஸலாத் - தொழுகையின் துஆக்கள்
- ஊதூ இலா ஹைரில் ஹுதா - நேர்வழியின் பக்கம் திரும்புங்கள்
- அத்இயத்துல் குர்ஆன் வஸ் ஸுன்னா - குர்ஆன் ஹதீஸ் கூறும் துஆக்கள்
- அல் மன்ஹஜு இல்மிஷ் ஷாமில் லில் அவாமி வத் துஆதி வல் முதர்ரிசீன் - ஆசிரியர்கள்,அழைப்பாளர்கள் மற்றும் பொது மக்களுக்குத் தேவையான முழுமையான கல்விப் பாதை

உரைகள்

அலெக்ஸாண்ட்ரியாவிலுள்ள மஸ்ஜித் இபாதுர் ரஹ்மான், மஸ்ஜித் உமர் இப்னு கத்தாப், மஸ்ஜித் மஜ்துல் இஸ்லாம், மஸ்ஜிது அல்ஃபத்ஹுல்இஸ்லாமீ, மஸ்ஜிது பக்ரீ, மஸ்ஜிது அல்மிஃப்தாஹ் போன்ற முக்கியமான பள்ளிவாசல்களில் சுமார் 1500க்கும் மேற்பட்ட உரைகளை ஆற்றியுள்ளார்கள். அவற்றில் முக்கியமான தலைப்புகள் சில பின்வருமாறு:

- தத்வீனுஸ் ஸுன்னத் - ஸுன்னாவை முறைப்படுத்துதல்
- அஸருத் தஷ்ஜீஉ ஃபித் தர்பியத்தி - ஒழுக்கம் பெறுவதில் வீரத்தழும்புகள்
- கய்ஃபல் அம்ரு இதா லம் தகுன் ஜமாஅதுன் - ஒற்றுமை இல்லாத நிலையில் என்ன செய்வது?
- அத்தம்யீஜு பய்னல் ஹயா வல் கஜல் - வெட்கம் வேறு, அறியாமை வேறு
- யா தாலிபல் இல்ம் அல்குர்ஆன் அவ்வலா - கல்வியைத் தேடும் மாணவர்களே! முதலில் குர்ஆனைக் கற்பீர்களாக.
- ளரூரத்துல் முஹாஃபழத்து அலஸ் ஸுனன் - ஸுன்னாவைப்

1

ஹிஜாபின் சிறப்பம்சங்கள்

❀

1. கீழ்ப்படிதலின் அம்சம் ஹிஜாப்

ஹிஜாப் என்பது அல்லாஹ்வுக்கும் அவனது தூதர் முஹம்மது ﷺ அவர்களுக்கும் கீழ்ப்படிந்து நடக்கும் ஒரு செயலாகும். அல்லாஹ் அதனைத் தனக்கும் தன் தூதருக்கும் கீழ்ப்படிகின்ற ஒரு கடமையாக ஆக்கி வைத்துள்ளான். அவன் கூறுகின்றான்:

وَمَا كَانَ لِمُؤْمِنٍ وَلَا مُؤْمِنَةٍ إِذَا قَضَى اللَّهُ وَرَسُولُهُ أَمْرًا أَن يَكُونَ لَهُمُ الْخِيَرَةُ مِنْ أَمْرِهِمْ وَمَن يَعْصِ اللَّهَ وَرَسُولَهُ فَقَدْ ضَلَّ ضَلَالًا مُّبِينًا

அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் ஏதேனும் ஒரு விவகாரத்தில் தீர்ப்பளித்துவிட்டால் பிறகு அந்த விவகாரத்தில் சுயமாகத் தீர்ப்பளிக்கும் அதிகாரம் இறைநம்பிக்கை கொண்டுள்ள எந்த ஆணுக்கும் இறைநம்பிக்கை கொண்டுள்ள எந்தப் பெண்ணுக்கும் கிடையாது. எவன் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் மாறுசெய்கின்றானோ அவன் வெளிப்படையான வழிகேட்டில் வீழ்ந்துவிட்டான். (குர்ஆன் 33:36)

فَلاَ وَرَبِّكَ لاَ يُؤْمِنُونَ حَتَّىَ يُحَكِّمُوكَ فِيمَا شَجَرَ بَيْنَهُمْ ثُمَّ لاَ يَجِدُواْ فِي أَنفُسِهِمْ حَرَجًا مِّمَّا قَضَيْتَ وَيُسَلِّمُواْ تَسْلِيمًا

(நபியே!) உம் இறைவன்மீது சத்தியமாக! அவர்கள் தங்களுக்கிடையே ஏற்பட்ட பிணக்குகளில் உம்மை நீதிபதியாக ஏற்றுக் கொண்டு, பின்னர் நீர் அளிக்கின்ற தீர்ப்பு குறித்து தங்களின் உள்ளங்களில் எத்தகைய அதிருப்தியும் கொள்ளாமல் முற்றிலும் அதற்குக் கீழ்ப்படியாத வரை அவர்கள் நம்பிக்கைகொண்டவர்கள் ஆகமாட்டார்கள். (குர்ஆன் 4:65)

பெண்கள் ஹிஜாப்[2] அணிய வேண்டும் என்பது வல்ல அல்லாஹ்வின் ஒரு கட்டளையாகும். அது குர்ஆனில் இவ்வாறு இருக்கின்றது.

وَقُل لِّلْمُؤْمِنَاتِ يَغْضُضْنَ مِنْ أَبْصَارِهِنَّ وَيَحْفَظْنَ فُرُوجَهُنَّ وَلَا يُبْدِينَ زِينَتَهُنَّ إِلَّا مَا ظَهَرَ مِنْهَا وَلْيَضْرِبْنَ بِخُمُرِهِنَّ عَلَىٰ جُيُوبِهِنَّ

(நபியே!) இறைநம்பிக்கைகொண்ட பெண்களிடம் கூறுவீராக: அவர்கள் தங்களுடைய பார்வைகளைப் பேணிக்கொள்ளட்டும்; தங்களுடைய வெட்கத்தலங்களைப் பாதுகாக்கட்டும்; தங்களுடைய அழகை வெளியில் காட்டாதிருக்கட்டும், அதிலிருந்து தானாக வெளியே தெரிகின்றவை தவிர. மேலும், தங்களுடைய மார்புகள்மீது தங்கள் முந்தானையைப் போட்டுக் கொள்ளட்டும். *(குர்ஆன் 24:31)*

அல்லாஹ்வின் பார்வையில் யாரேனும் தமது அழகைக் கவர்ச்சியாகக் காட்டினால் அது அறியாமை நிறைந்த செயலாகும்.

وَقَرْنَ فِي بُيُوتِكُنَّ وَلَا تَبَرَّجْنَ تَبَرُّجَ الْجَاهِلِيَّةِ الْأُولَىٰ

உங்களுடைய வீடுகளில் தங்கியிருங்கள். முந்தைய அறியாமைக்[3] காலத்தைப் போன்று ஒப்பனைகளையும் ஒய்யாரங்களையும் காட்டிக் கொண்டு திரியாதீர்கள். *(குர்ஆன் 33:33)*

وَإِذَا سَأَلْتُمُوهُنَّ مَتَاعًا فَاسْأَلُوهُنَّ مِن وَرَاءِ حِجَابٍ ذَٰلِكُمْ أَطْهَرُ لِقُلُوبِكُمْ وَقُلُوبِهِنَّ

தூதரின் மனைவியரிடம் நீங்கள் ஏதேனும் கேட்பதாக இருந்தால் திரைமறைவிற்கு அப்பால் நின்று கேளுங்கள். தூதரின் அந்தஸ்தைப் பாதுகாக்கும் பொருட்டு நேருக்கு நேர் அவர்களிடம் கேட்காதீர்கள். திரைமறைவிற்கு அப்பால் நின்று கேட்பதுதான்

---

2 ஹிஜாப் (புர்கா, பர்தா) இது ஏதோவொரு கலாசார விசயம் எனக் கருதக் கூடாது. இது அல்லாஹ்வின் கட்டளை. இதற்கான நிபந்தனைகள் அறேபியர், எகிப்தியர், பாகிஸ்தானியர், கறுப்பு, வெள்ளை நிறத்து அமெரிக்கர் என அமைவதில்லை. இதன் நோக்கம் பெண்களின் பாதுகாப்பே. இதற்கான நிபந்தனைகள், வழிமுறைகள் என்பன குர்ஆனிலும் நபியின் வழிகாட்டலிலும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் அனுமதிக்கப் பட்டவை எவையென அவர்களைப் படைத்த அல்லாஹ்வைவிட அறிந்தவர்கள் யாருமில்லை. அவனது நெறிமுறைகள் ஞானம் சார்ந்தவை; அவனது நடவடிக்கைகள் அனைத்தும் அவ்வாறே ஞானமிக்கவையாய் அமைகின்றவை.

3 இஸ்லாமுக்கு முந்தைய காலத்தையே இங்கு அல்லாஹ் கூறுகின்றான்.

6. இறைவிசுவாசத்தின் அடையாளம் ஹிஜாப்

அல்லாஹ் அல்-மூஃமினாத் எனும் விசுவாசிகளான பெண்களை நோக்கியே தவிர மற்றவர்களிடம் ஹிஜாப் பற்றி விவரிக்கவில்லை. அவன் இவ்வாறு தன் தூதரைப் பணிக்கின்றான்:

وَقُل لِّلْمُؤْمِنَاتِ

(நபியே) அல்லாஹ்வை விசுவாசம்கொண்ட பெண்களிடம் கூறுவீராக. (குர்ஆன் 24:31)

وَنِسَاء الْمُؤْمِنِينَ

விசுவாசிகளின் மனைவியர் (33:59) என்றும் வேறு வசனத்தில் குறிப்பிட்டுப் பேசும்படி தனது நபிக்குக் கட்டளை இடுகின்றான்.

பனூ தமீம் கோத்திரத்தைச் சேர்ந்த பெண்கள் ஒரு முறை ஆயிஷா ﵂ அவர்களைச் சந்திக்க வந்தார்கள். அச்சமயம் அவர்கள் மெல்லிய ஆடை அணிந்திருந்தார்கள். அப்போது, ஆயிஷா ﵂ அவர்கள் கூறினார்கள்: உண்மையிலேயே நீங்கள் விசுவாசம்கொண்ட (முஸ்லிம்) பெண்கள்தாம் என்றால் (நீங்கள் அணிந்துள்ள) இந்த ஆடைகள் விசுவாசம்கொண்டவர்களுக்குரிய ஆடைகள் அல்ல (என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்). நீங்கள் விசுவாசம் கொள்ளாத (முஸ்லிமல்லாத) பெண்களாக இருப்பின் இதனை அனுபவியுங்கள். அதாவது, இந்த ஆடைகளை அணிந்துகொள்ளுங்கள். (மஆலிம் அஸ்ஸுனன் 4/376)

7. வெட்க உணர்வின் வடிவம் ஹிஜாப்

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

إِنَّ لِكُلِّ دِينٍ خُلُقًا, وَإِنَّ خُلُقَ الْإِسْلَامِ الْحَيَاءُ

ஒவ்வொரு மதத்திற்கும் உரிய ஓர் ஒழுக்க மாண்பு உண்டு. இஸ்லாமின் ஒழுக்க மாண்பானது ஹயா (நாணம்) சார்ந்ததாகும். (அறிவிப்பு: இப்னு அப்பாஸ் ﵄, சுனனு இப்னு மாஜா 4182, அஸ்ஸஹீஹா 940)

الْحَيَاءُ مِنْ الْإِيمَانِ, وَالْإِيمَانُ فِي الْجَنَّةِ

நாணம் விசுவாசம் சார்ந்தது. விசுவாசமோ சுவனத்திற்குரியது. (அறிவிப்பு: அபூ பக்ரா நுஃபைஃ இப்னுல் ஹாரிஸ் ﵁, சுனனுத் திர்மிதீ 2009, அஸ்ஸஹீஹா 495)

الْحَيَاءُ وَالْإِيمَانُ قُرِنَا جَمِيعًا، فَإِذَا رُفِعَ أَحَدُهُمَا, رُفِعَ الآخَرُ

நாணமும் விசுவாசமும் ஒன்றையொன்று சார்ந்து நிற்பவை; இவற்றுள் ஒன்றை எடுத்துவிட்டால் மற்றது வீழ்ந்துவிடும். *(அறிவிப்பு: அப்துல்லாஹ் இப்னு உமர் ﷺ, ஹாகிம் 58, ஸஹீஹுல் ஜாமிஉ 1603)*

விசுவாசிகளின் அன்னை ஆயிஷா ﷺ அவர்கள் கூறுகின்றார்கள்:

كُنْتُ أَدْخُلُ بَيْتِيَ الَّذِي دُفِنَ فِيهِ رَسُولُ اللهِ - صلى الله عليه وسلم - وَأَبِي, فَأَضَعُ ثَوْبِي، فَأَقُولُ: إِنَّمَا هُوَ زَوْجِي وَأَبِي، فَلَمَّا دُفِنَ عُمَرُ مَعَهُمْ، فَوَاللهِ مَا دَخَلْتُ إِلَّا وَأَنَا مَشْدُودَةٌ عَلَيَّ ثِيَابِي, حَيَاءً مِنْ عُمَرَ

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களும் பின்னர் எனது தந்தையும் அடக்கம் செய்யப்பட்ட அறையினுள் நான் எனது மேலங்கி இல்லாது பிரவேசிப்பது வழக்கமாக இருந்தது. அப்பொழுது, அவர்கள் இருவரும் எனது கணவரும் தந்தையுமே என்ற கருத்து இருந்தது. எனினும், உமர் ﷺ அவர்கள் அங்கு அடக்கப்பட்ட பின்னர் அவரைக்கொண்டு ஏற்பட்ட நாணத்தின் காரணமாக நான் மேலங்கி இல்லாது அந்த அறையின் உள்ளே பிரவேசிப்பதில்லை. *(முஸ்னது அஹ்மது 25701, மிஷ்காதுல் மஸாபீஹ் 1771)*

இங்கு அன்னை ஆயிஷா ﷺ அவர்கள் அந்நிய ஆண்கள் தொடர்பாக எத்தகைய கருத்தைக்கொண்டிருந்தார்கள் என உணர முடிகிறதல்லவா? ஒரு பெண்ணிடம் இயற்கையிலேயே அமையப் பெற்றுள்ள நாண உணர்வுக்கு ஏற்ற விதத்திலேயே ஹிஜாபும் அமைந்துள்ளது.

8. ரோஷமுள்ள மனிதர்களின் விருப்பம் ஹிஜாப்

நேர்வழியில் செல்கின்ற ஒரு மனிதனின் இயற்கையான குணம், அவருடைய மனைவியையோ, பெண் மக்களையோ அந்நியர் பார்ப்பதை விரும்புவதில்லை. ஹிஜாப் இந்தக் குணத்திற்கு மிகப் பொருத்தமான ஒன்றாக அமைந்துள்ளது. கீறாஹ் எனும் ரோஷ உணர்வு மனிதனுக்கு ஒழுக்க உணர்வின் தூண்டுதலை வழங்கிப் பெண்களை அந்நியரிடமிருந்து பாதுகாக்க துணைபுரிகின்றது. இந்த ஒழுக்கத்தைச் சார்ந்து நிற்பதை உலகில் நிறைய மனிதர்கள் இழந்துவிட்டார்கள். அத்தகையோர் அந்நியப் பெண்களை இச்சை, ஆர்வம், ஆசையுடன் பார்ப்பதை நீங்கள் காணுவீர்கள்.

2

தபர்ருஜ்[9] – கவர்ச்சியைக் காட்டுதல் ஓர் அவமானம்

❀

1. அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் கீழ்ப்படியாத குணம்தான் தபர்ருஜ்

எவர் அல்லாஹ்வுக்கும் அவன் தூதர் ﷺ அவர்களுக்கும் கீழ்ப்படியாது இருக்கின்றாரோ அவர் தனக்குத் தானே தீங்கைத் தேடிக் கொள்பவர் ஆவார்; அவரது அந்தத் தீய கீழ்ப்படியாத குணத்தால் அல்லாஹ்வுக்கு எந்தத் தீங்கும் ஏற்படப்போவது இல்லை.

كُلُّ أُمَّتِي يَدْخُلُونَ الْجَنَّةَ إِلَّا مَنْ أَبَى قَالُوا: يَا رَسُولَ اللهِ وَمَنْ يَابَى قَالَ مَنْ أَطَاعَنِي دَخَلَ الْجَنَّةَ، وَمَنْ عَصَانِي فَقَدْ أَبَى

---

9 தபர்ருஜ்: மொழிரீதியாக இதன் கருத்து ஒரு பெண் தன் அழகை வெளிக்காட்டுவது; அவளது முகத்தை வெளிக்காட்டுவது; அவளது உடலமைப்பை வெளிக்காட்டுவது; அத்தோடு தன் கணவரல்லாத மற்ற ஆண்களைக் கவருவதற்காக எல்லா வகையான வழிகளையும் கையாள்வது எனப்படும். இஸ்லாமிய மரபுப்படி இதன் கருத்து, பெண் தன் அழகை வெளிக்காட்டுவது எனப்படும். மேலும், அவள் எடுப்பான தோற்றம் தருகின்ற வகையில் நடப்பதும் அங்க அசைவில் பாவனை செய்வதுமாகும். (தபரீ 22/4)

சிலரின் கருத்து, அந்நிய கண்களுக்கு அழகாகத் தெரிவதற்கு என ஒரு பெண் தன்னை என்னென்ன வகையில் அலங்கரித்துக்கொள்கின்றாளோ அவை எல்லாமே தபர்ருஜ் ஆகும் என்பதாகும். சிலவேளை ஒரு பெண் மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கும் எண்ணத்துடன் தலையை மூடும் துணியைப் பளிச்சிடும் பல வண்ண நிறத்தில் கவர்ச்சிகரமாக அணிந்தால் அதுவும் ஜாஹிலிய்யா (அறியாமைக் கால) தபர்ருஜ் எனும் கவர்ச்சி காட்டுதலாகும். (ஹிஜாப், பக்:132, மவ்லானா மவ்தூதி)

9. ஷைத்தானிய வழிமுறைதான் தபர்ருஜ்

ஆதம், ஹவ்வா இருவருடைய வாழ்வில் நிகழ்ந்த அனைத்தும் அல்லாஹ்வின் விரோதியான ஷைத்தானின் சதிகளுக்குச் சான்றாய் அமைகின்றன. அவன் அவர்களுடைய மறைவான பகுதிகளை வெளிக்காட்டும் ஆர்வத்தை அவர்களிடம் தூண்டி, தீமையும் வெட்கக்கேடானதுமான பாவங்கள் பரவச் செய்தான். அத்தோடு ஒரு பெண்ணின் தபர்ருஜைத்தான் ஷைத்தான் தன்னுடைய தீய நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கான ஆரம்ப அம்சமாகக் கொள்கிறான் என்பதும் அறிய முடிகிறது. அல்லாஹ் எச்சரிக்கிறான்:

يَا بَنِي آدَمَ لاَ يَفْتِنَنَّكُمُ الشَّيْطَانُ كَمَا أَخْرَجَ أَبَوَيْكُم مِّنَ الْجَنَّةِ يَنزِعُ عَنْهُمَا لِبَاسَهُمَا لِيُرِيَهُمَا سَوْءَاتِهِمَا

ஆதத்தின் மக்களே! எவ்வாறு ஷைத்தான் உங்கள் தாய் தந்தை யரைச் சொர்க்கத்திலிருந்து வெளியேற்றினானோ மேலும், அவர்களுடைய வெட்கத்தலங்களைப் பரஸ்பரம் வெளிப்படுத் திட வேண்டும் என்பதற்காக அவர்களுடைய ஆடைகளைக் களைந்தானோ அவ்வாறு மீண்டும் உங்களை அவன் குழப்பத்தில் ஆழ்த்திட வேண்டாம். (குர்ஆன் 7:27)

இதிலிருந்து தபர்ருஜ் மீதான அழைப்பை உருவாக்கி அலாங் காரங்களை வெளிக்காட்டும் தன்மையைக் கொண்டுவந்தவன் ஷைத்தான்தான் என்பது தெளிவாகின்றது. பெண் விடுதலை என்ற பெயரில் அரை குறை ஆடையுடன் உடலழகை வெளிப்படுத்துகிற தவறின்பக்கம் அழைக்கின்ற தலைவர்களுக்கெல்லாம் தலைவனும் முன்னோடியும் அவனே. எவர்கள் கருணை மிகுந்த அல்லாஹ்வைப் புறக்கணித்துவிட்டு ஷைத்தானுக்குக் கீழ்ப்படிந்து, அவனைப் பின்பற்றுகின்றார்களோ அவர்களுக்கு அவனே இமாம் (தலைவன்) ஆவான். ஒட்டுமொத்தமாகக் கூறுவதாயின், எவர்கள் முஸ்லிம் களைக் கெடுத்து அவர்களது சந்ததியினரையும் தவறான வழியில் இட்டுச் செல்ல முனைகின்றார்களோ அவர்களுக்கு ஷைத்தானே வழிகாட்டியாவான். நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

مَا تَرَكْتُ بَعْدِي فِتْنَةً هِيَ أَضَرُّ عَلَى الرِّجَالِ مِنَ النِّسَاءِ

நான் எத்தகைய ஃபித்னாவை(தீங்கை)யும் விட்டுச் செல்ல வில்லை பெண்கள் மூலம் ஆண்களுக்கு ஏற்படும் ஃபித்னா (தீங்கு) தவிர. (அறிவிப்பு: உஸாமா ஸைது ؓ, முஸ்லிம் 2740)

ஆதம் ﷺ அவர்கள் மறதியின் காரணமாக ஒரு தவறைச் செய்தார். அதற்காக வருந்தி அல்லாஹ்விடம் மன்னிப்பை வேண்டி நின்றார். மன்னிக்கும் தயாளத் தன்மையுடைய அல்லாஹ்வும் அவரது வேண்டுதலை ஏற்றுக்கொண்டான். ஆயினும், பிரச்சினை தீர வில்லை. ஆதமின் சந்ததியினருக்கும் ஷைத்தானுக்கும் இடையே போர் தொடர்கின்றது. அவன் இன்றும் ஆண்கள் பெண்கள் யாவரையும் அல்லாஹ்வுக்கு மாறுசெய்ய வைத்து பாவத்தில் தள்ள தூண்டிக்கொண்டே இருக்கின்றான். அல்லாஹ்விடம் தஞ்சம் புகுவதைத் தவிர வேறு வழியே இல்லை. அல்லாஹ்வை உறுதியாக நம்பிக்கைகொண்டு நமது பாவச்செயல்களுக்காக வருந்தி பாவமன்னிப்பு வேண்டி நிற்பதும், அவன் நினைவில் திளைத்து கெட்ட உணர்வுகள் எண்ணங்கள் ஆசைகள் ஆகியவற்றிலிருந்து நம்மைப் பாதுகாத்துக்கொள்ள அவனையே நாடி நிற்பதும் மிகமிக அவசியம். உண்மையில் இஸ்லாம் வகுத்தளித்துள்ள ஒழுக்க வாழ்வை அப்படியே பின்பற்றி நம் அனைவரையும் நெறிப்படுத்திக்கொள்வதே ஈருலக வெற்றிக்கான வழியாகும்.

10. யூதர்களின் வழிமுறையே தபர்ருஜ்

நாடுகள் பலவற்றின் அழிவுக்கும் இழிவுக்கும் பெண்களை மிகவும் தீங்குத் தரக்கூடிய கருவியாகப் பயன்படுத்தியவர்கள் யூதர்கள். தங்கள் (யூத) நிறுவனங்களைப் பரவலாக்கிப் பயன் பெறுவதற்கு தபர்ருஜை ஒரு சக்திமிக்கக் கருவியாகக்கொண்டு பரப்பினார்கள் இவர்கள். இந்தத் துறையில் இவர்களுக்குத் தனிப் பயிற்சியும் அனுபவமும் உண்டு. ஒருவர் தமது கண்களைச் சற்று அகல விரித்து உலகை நோக்கினால் திரைப்பட உலகமான ஹாலிவுட்டையும், அழிவைத் தருகின்ற அமைப்புகளையும், பிரபல்யமிக்க நவநாகரிக இல்லங்களையும், செல்வாக்குமிக்க பத்திரிகைகளையும், விளம்பரத் துறையையும் செய்தி நிறுவனங்களையும் யார் நடத்துகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். பெரிய தீமைகளுக்கு வித்திடும் திரைப்படங்கள், ஆடை அணிகலன்கள் என்பன யார் கரங்களுக்குள் இருக்கின்றன எனத் தெரிந்துகொள்ள முடியும்.

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

فَاتَّقُوا الدُّنْيَا وَاتَّقُوا النِّسَاءَ فَإِنَّ أَوَّلَ فِتْنَةِ بَنِي إِسْرَائِيلَ كَانَتْ فِي النِّسَاءِ

இவ்வுலக வாழ்க்கை குறித்து எச்சரிக்கையாய் இருங்கள். (அதன் தூண்டுதலைவிட்டு உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்), பெண்

3

ஹிஜாப் – அவசியமான அடிப்படை விதிகள்

❀

1. உடலை முழுமையாக மறைத்தல்

ஹிஜாப் நோக்கித் திரும்பிவிடல் (பகுதி மூன்று) நூலின் ஆசிரியர் தமது நூலில் பெண்கள் தமது முகம், கைகள் ஆகியவையும் மறைக்க வேண்டும் என்ற கருத்தைக் கொண்டுள்ளார். அறிஞர்கள் சிலர் ஒரு பெண் தன் மூலமோ அல்லது தனக்கு மற்றவர்கள் மூலமோ ஃபித்னா எனும் தீங்கு ஏற்படாத நிலையில் தனது முகம், கைகள் ஆகியவற்றை மறைக்காமல் இருக்கலாம் என்ற கருத்தைக் கொண்டுள்ளார்கள். எனினும், ஓர் அழகான பெண் தனது முகம், கைகள் ஆகியவற்றை வேறு பொருட்களால் மேலும் அழகுபடுத்துகின்ற நிலையில், அவள் வாழுகின்ற சமூகம் கெட்டு, அந்த மக்களின் பார்வை, பேச்சு, நடத்தையும் கெட்டிருக்கும் என்றால், இந்தச் சமயத்திலும் அவள் தனது முகம், கைகள் ஆகியவற்றை மறைக்காமல் இருப்பது தடைசெய்யப்பட்டதாகும்.

2. ஹிஜாப் ஒரு காட்சிப் பொருளாகக் கூடாது

ஹிஜாப் ஒரு காட்சிப் பொருளின் தன்மையைப் பெறக் கூடாது. பெண்களின் அழகை மறைக்கவே அல்லாஹ் அதைக் கடமை யாக்கினான். அல்லாஹ் கூறுகின்றான்:

وَلَا يُبْدِينَ زِينَتَهُنَّ إِلَّا مَا ظَهَرَ مِنْهَا

பெண்கள் தங்களுடைய அழகை வெளியில் காட்டாதிருக்கட் டும். அதிலிருந்து தாமாக வெளியே தெரிகின்றவற்றைத் தவிர. *(குர்ஆன் 24:31)*

وَقَرْنَ فِي بُيُوتِكُنَّ وَلَا تَبَرَّجْنَ تَبَرُّجَ الْجَاهِلِيَّةِ الْأُولَى

மேலும், உங்களுடைய வீடுகளில் தங்கியிருங்கள். அறியாமைக் காலப் பெண்களைப் போல் ஒப்பனையையும் ஒய்யாரத்தையும் காட்டிக்கொண்டு திரியாதீர்கள். (குர்ஆன் 33:33)

அல்லாஹ்வின் இக்கூற்றுகள் நம் கவனத்திற்குரியன. எனவே, எந்தக் கட்டத்திலும் ஹிஜாபை அலங்காரக் காட்சிக்குரிய ஒன்றாக அமைத்துக்கொள்வது நியாயமான புத்திக்கு ஏற்புடையதாக இல்லை என்பதை நம் எண்ணத்தில் கொள்ள வேண்டும்.

3. ஹிஜாப் மெல்லியதாக இல்லாமல் கனமாக இருக்க வேண்டும்

ஹிஜாப் அணிவதன் உண்மையான நோக்கம் நிறைவேற வேண்டும். அவ்வாறில்லாமல் பெண்ணின் உடலமைப்பு வெளியே தெரியக்கூடிய முறையில் பெயருக்கு மெல்லிய துணியால் ஹிஜாப் அணிவதில் அர்த்தமே இல்லை. அது ஹிஜாப் அணிந்த நிர்வாண நிலை என்றுதான் குறிப்பிட வேண்டும். அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

سَيَكُونُ فِي آخِرِ أُمَّتِي نِسَاءٌ كَاسِيَاتٌ عَارِيَاتٌ عَلَى رُؤُوسِهِنَّ كَأَسْنِمَةِ الْبُخْتِ الْعَنُوهُنَّ فَإِنَّهُنَّ مَلْعُونَاتٌ

எனது சமூகத்தில் பிந்திய காலகட்டம் ஒன்றில் பெண்கள் ஆடை அணிந்தும் (உண்மையில்) நிர்வாணமாக இருப்பார்கள். அவர்களது தலைகளின் மேல் ஒட்டகங்களின் திமில் போன்றவை (தலைமுடி வைக்கப்பட்டு) இருக்கும். அவர்களைச் சபியுங்கள். நிச்சயமாக அவர்கள் சபிக்கப்பட வேண்டியவர்களே. (அறிவிப்பு: அப்துல்லாஹ் இப்னு உமர் ؓ, தப்ரானீ 9331)

அவர்கள் மீண்டும் கூறினார்கள்:

لاَ يَدْخُلْنَ الْجَنَّةَ وَلاَ يَجِدْنَ رِيحَهَا وَإِنَّ رِيحَهَا لَيُوجَدُ مِنْ مَسِيرَةِ كَذَا وَكَذَا

இவர்கள் சொர்க்கத்திற்குள் நுழையமாட்டார்கள். (அது மட்டுமில்லை.) சொர்க்கத்தின் நறுமணத்தை நுகரக்கூடிய அளவு அருகில் இருந்தபோதிலும் அதை அவர்கள் நுகரும் வாய்ப்பைப் பெறமாட்டார்கள். (அறிவிப்பு: அபூ ஹுரைரா ؓ, முஸ்லிம் 2128)

இக்கூற்றுகளிலிருந்து ஓர் உண்மையை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். அதாவது, எந்தப் பெண் உடலமைப்பு அப்படியே தெரியக்கூடிய மெல்லிய ஆடை அணிகின்றாளோ, அந்தப்